செய்தி வெளியீடு எண் : 244 நாள் : 07.02.2024

**மாநில அளவில் வெற்றி பெற்ற பயிற்சியாளர்களுக்கு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சான்றிதழ் வழங்கினார்**

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் செயல்படும் தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்களின் படைப்பு திறன்களை வெளிக்கொணரும் பொருட்டு 6வது மாநில அளவிலான போட்டி நடைபெற்றது. இதில் 16 பயிற்சியாளர்கள் வெற்றி பெற்றனர். மேலும், 57வது மாநில அளவிலான திறன் போட்டிகளில் 6 பயிற்சியாளர்கள் வெற்றி பெற்றனர். இப்போட்டிகளில் வெற்றி பெற்ற பயிற்சியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் ரொக்கப்பரிசுக்கான காசோலையினை மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் திரு.சி.வெ.கணேசன் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. குமார் ஜெயந்த், இ.ஆ.ப., வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் திருமதி. எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in